இரண்டு தினங்களுக்கு முன் விவசாயத் துறை மானியத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் உணவுப் பொருளின் அவசியத்தை உணர்ந்து பூச்சிக் கொல்லி மருந்து 50 சத வீதம் உணவுப் பயிர்களுக்கும் சப்சிடி கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதன் காரணமாக வாணிகப் பயிர்களுக்கு 50 சத வீதம் கொடுத்துவந்த சப்சிடியை 35 சத வீதம் ஆகக் குறைத்து, உணவுப் பயிர்களுக்கும், 35 சத வீதம் சப்சிடி கொடுப்பது என்பதாக—இரண்டுக்கும் சமமாக மானியம் வழங்கும் முடிவு ஒன்றை இந்த அரசு செய்துள்ளது என்பதை இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, வாணிகப் பயிர்களுக்கு 35 சதவீதம் மானியம் என்று குறிப்பிட்டார்கள். புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலாவது தென்னை மரப் பாதுகாப்புக்கு 50 சதவீதம் என்ற அளவிலாவது கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சம்பந்தப்பட்டவரை அரசு என்ன செய்யும் என்பது பற்றி இந்த மன்றத்தில் நான் அளித்துள்ள விவரமான அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : Sir, nowadays, it is very difficult for the ryots to buy pesticides and fungicides because their prices have been increased as cmpared to the last year. But the procurement price is not increased proportionately. So, will the Government come forward to raise the price of foodgrains or give 50 per cent subsidy to pesticides and fungicides ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் முதல் கேள்விக்குப் பதில் அளித்திருப்பதைக் கூர்ந்து பார்த்திருந்தால் இந்தக் கேள்வி எழுந்தே இராது. பணப் பயிருக்கும் உணவுப் பயிருக்கும் இன்றைக்கு 35 சத விகிதம் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்சமயம் பணப் பயிர்களுக்கு 75 சத விகிதம் அரசாங்க மானியம் ஆக சப்சிடி கொடுக்கப்படுகிறது. அதை 50 சத விகிதமாகக் குறைத்து உணவுப் பெருக்கத்தின் யோசனையை முன்னிட்டு, தற்சமயம் உணவுப் பயிருக்காக கொடுக்கப்படும் 35 சத விகிதம் சப்சிடியை 50 சத விகிதமாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது இந்த அளவு சலுகை வழங்கப்பட்டதன் மூலமாக தமிழக சர்க்காருக்கு 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகிறது. கனம் அங்கத்தினர் கேள்விப்படி அதிகச் சலுகை அளிக்க, சர்க்காரின் நிதி நிலை தற்போது சரியாக இல்லாததால் முடியாத நிலையில் இருக்கிறது. இப்போது அளிக்கப்பட்டிருக்கும் சலுகையிலேயே விவசாயிகள் ஓரளவு திருப்தி அடைந்திருக்கிறார்கள்.

கரும்புத் தீர்வை

* **378. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ரோட்டு வசதிகள் செய்வதற்காக Sugar cane cess fund ஆக இதுவரை எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் ?

(இ) அதில் ரோட்டு அபிவிருத்தி செய்ய எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது : மாவட்ட வாரியாக, சர்க்கரை மில் வாரியாக ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) —(இ) சபை முன் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a 565–566-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கைப்படி பார்த்தால் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை 29,81,260 ரூபாய் 48 பைசா கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூரில் இருந்து 6 லட்சத்தி சொச்சம் கிடைத்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் 12 லட்சம் சொச்சம் கொடுத் திருக்கிறது. சேலம் 10 லட்சம் சொச்சம் கொடுத்திருக்கிறது. இதில் செங் கற்பட்டு மாவட்டம் கொடுத்தது 12 லட்சம். ஆனால், ரூபாய் பதினேரு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் ரூபாய் ரோடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகமாகக் கொடுத்திருக்கும் வடாற்காடு மாவட்டத்திற்குப் போது மான பாலங்களோ, ரோடு வசதிகளோ செய்து தரப்படவில்லை. ஆகவே அங்கே இருக்கும் ஷேர் ஹோல்டர்ஸ் எவ்வளவு தூரம் மனம் புண்பட்டு இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இத்துறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு மூன்று கேள்விகளைச் சேர்ந்தாற்போல் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் பதில் சொல்கிறேன். வடாற்காடு மாவட்ட சர்க்கரை ஆலை 21–11–1960-இலும் மதுராந்தகம் ஆலை 22-3-1963-இலும் துவக்கப்பட்டன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டம் அதிகமாகச் செலவிட்டது என்றால் அதற் கான காரணம் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பொறுப்பில் இருந்தவர்கள் நல்ல அக்கறை காட்டி அளிக்கப்பட்ட தொகையை வைத்துக்கொண்டு கணிசமாக வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்திலும் கூடுமானவரை சர்க் கார் தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்யும்.

திரு. கே. விநாயகம் : ஆம்பூரில் இருக்கும் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வரவேண்டுமென்றால், அங்கிருக்கும் ரயில்வே லைனைத் தாண்டித் தான் வரவேண்டி இருக்கிறது. அப்போதைக்கப்போது அங்கிருக்கும் கேட் சாத்தப்பட்டு விடுவதால் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வருவது தடைபடு கிறது. எனவே, இந்தப் பணத்திலிருந்து ஒரு பாலம் அமைக்க, மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் யோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர் களுடைய யோசனை நல்ல யோசனைதான். ஆனால் 1967–68–ம் ஆண்டுக் குரிய திட்டத்தில் இதற்கு வசதி இல்லை. ரூபாய் 30 லட்சம்தான் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அரிசன விடுதிகள், சீர்காழி வட்டம்

*379 வினா—**திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய ஹரிஜனநல செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுக்காவிலுள்ள அரிசனமாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் கட்டுவது சம்பந்தமாக தயார் செய்துள்ள திட்ட நகல் அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே மேற்படி கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சீர்காழியில் அரசினர் மாணவர் விடுதி, அரசினர் மாணவியர் விடுதி ஆகியவற்றிற்கும் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் பிரசினை கடந்த எட்டு ஆண்டு கால மாக பரிசீலிக்கிறோம், பரிசீலிக்கிறோம் என்று முன்பிருந்த நிர்வாகத்தால் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனியாக இயக்கு நர் இருந்தால் நன்றாக இருக்குமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம் ஜூனியர் கிரேட் டைரக்டர்களை இந்தக் கமிட்டியை விட்டு எடுத்து விட்டு ஸீனியர் கிரேட் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களை எஜுகேஷன் விங்கில் போட்டால் சரியாக இருக்கும். இதற்குரிய திட்டத்தை அரசாங் கம் ஆராயுமா ?